# EWS முதல் Delimitation வரை - யார் பாதிக்கப்பட்டார்கள்?

இன்றிலிருந்து சரியாக 8 வருடம் பின்னோக்கி 2019 ஜனவரி 9 போனால் ஒரு வரலாற்று துரோகம் நடந்தது.

**1. 2019 EWS Bill – யார் யார் கைகோர்த்தார்கள்?**

மோடி அரசு கொண்டு வந்த "பொருளாதாரத்தில் பின்தங்கிய உயர்சாதியினருக்கு 10% இடஒதுக்கீடு" மசோதா.

வாக்களிப்பு விபரம்:

- மொத்த ஆதரவு: 323
- எதிர்ப்பு: 3 மட்டுமே
- காங்கிரஸ், கம்யூனிஸ்ட், பிற கட்சிகள் அனைத்தும் "வரவேற்கிறோம்" என்று சொல்லி ஆதரித்தன.

காரணம் என்ன?

2019 தேர்தல் நெருக்கடி. பொதுப்பிரிவு வாக்குகள் கைவிட்டு போய்விடக்கூடாது என்ற பயம். அதனால் பாஜகவோடு ஒண்ணா மண்ணா நின்றார்கள்.

**2. EWS–னால் பிற்படுத்தப்பட்ட / தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏற்பட்ட இழப்பு:**

EWS வந்த பிறகு மொத்த இடஒதுக்கீடு 49.5% ல இருந்து 59.5% ஆக உயர்ந்தது.

**ஆனா உண்மையான பாதிப்பு என்ன?**

1. பொது போட்டி - 50.5% ல இருந்து 40.5% ஆக குறைந்தது.

அதாவது SC, ST, BC, MBC மாணவர்கள் திறமையின் அடிப்படையில் போட்டியிட்டு வந்த 10% சீட்டுகள் பறிபோனது.

2. வருமான வரம்பு: ஆண்டுக்கு 8 லட்சம்.

கிராமத்துல 5 ஏக்கர் நிலம் வச்சிருக்கிற ஒரு பணக்காரரும் EWS சர்டிபிகேட் வாங்க முடியும். ஆனா BC குடும்பத்தில் முதல் தலைமுறை பட்டதாரி அவதிப்படுறான்.


3. இது சமூக நீதிக்கு எதிரானது. இடஒதுக்கீடுனா சமூக ரீதியா பின்தங்கியவர்களுக்கு. ஆனா EWS சாதியை பார்க்காம பொருளாதாரத்தை மட்டும் பார்த்தது.

**3. 2026 – இப்போதைய ஆபத்து: Delimitation – தொகுதி மறுவரையறை**

மக்கள் தொகை 2026 கணக்கெடுப்பின் அடிப்படையில் நாடாளுமன்ற தொகுதிகள் பிரிக்கப்பட்டால்,

- தமிழ்நாடு: மக்கள் தொகை கட்டுப்பாட்டால் தொகுதிகள் குறையலாம். இப்போது 39
- உத்திரபிரதேசம், பீகார்: மக்கள் தொகை கூடியதால் தொகுதிகள் கூடும்.

தென் மாநிலங்களின் நாடாளுமன்ற பலம் குறையும். மத்தியில் நிதி, திட்டம், கொள்கை முடிவு எடுக்கும் போது தமிழ்நாடு போன்ற மாநிலங்களின் குரல் ஓங்கி ஒலிக்காது. இது மாநில சுயாட்சிக்கு எதிரானது.



**சைதை சாதிக்**
தி.மு.க. செய்தித் தொடர்பாளர்

**4. திமுகவின் நிலைப்பாடு**

EWS வந்தப்போதே திமுக மட்டும்தான் நாடாளுமன்றத்தில் எதிர்து வாக்களித்தது. காரணம்: இது சமூக நீதிக்கு எதிரானது.

இன்று Delimitation விவகாரத்திலும் திமுகவின் நிலைப்பாடு தெளிவு: "மாநில உரிமை, கூட்டாட்சி தத்துவம்".

திமுக கூட்டணியில் இருந்து ஜெயிச்சிட்டு, இன்னொரு கூட்டணிக்கு ஓடி, இப்போ கையேந்தி நிக்கிறவங்க வந்து "திமுக என்ன முடிவு எடுக்கும்" னு கேக்குறது அரசியல் நேர்மையா?

EWS-ல் பிற்படுத்தப்பட்டவர்களின் 10% வாய்ப்பு பறிக்கப்பட்டது.

Delimitation-ல் தென் மாநிலங்களின் அரசியல் உரிமை பறிக்கப்படும்.

இரண்டுக்கும் எதிராக நின்ற ஒரே கட்சி திமுக.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் - தோவாளை கிழக்கு ஒன்றியம்

# செண்பகராமன்புதூர் ஊராட்சி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் ஆலோசனை வழங்கினார்!

*குமரி, ஜூலை, 20 -* கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், தோவாளை கிழக்கு ஒன்றியம், செண்பகராமன்புதூர் ஊராட்சி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைகூட்டமானது 18.07.2026, சனிக்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில் செண்பகராமன்புதூர்திமுகஅலுவகம் அருகில் வைத்து மாவட்ட பிரதிநிதி கல்யாணசுந்தரம் தலைமையில் ஒன்றிய செயலாளர் செல்வன் முன்னிலையில் நடைபெற்றது.



கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

ஆலோசனைகூட்டத்தில் மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை செயலாளர் திரு.தில்லை செல்வம், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட பொருளாளர் கேட்சன், மாவட்ட துணைச் செயலாளர் பூதலிங்கம் பிள்ளை, பொதுக்குழு உறுப்பினர் ரஹ்மான், மாவட்ட பிரதிநிதி காந்தி, ஒன்றிய அவைத் தலைவர் சீனிவாசன், துணைச் செயலாளர் ராஜாரமணன், பொருளாளர் ராஜாபாபு, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் விஜய், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் சங்கர், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி மணிகண்டன், தேவதாஸ் உட்பட ஒன்றியநிர்வாகிகள், கிளைகழகசெயலாளர்கள், சார்புஅணிநிர்வாகிகள், BLA 2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டது.

செண்பகராமன்புதூர் ஊராட்சி ஆதிச்சன்புதூர் பகுதியில் இயங்கி வரும் சதீஷ் நவீன அரிசி ஆலையிலிருந்து வெளியேறும் தூசியால் அப்பகுதி மக்களுக்கு குறிப்பாக குழந்தைகள் மற்றும் வயதானமுதியோர்களுக்கு ஆஸ்துமா உள்ளிட்ட உடல்நலப் பிரச்சினைகள் ஏற்படுவதாகபொதுமக்கள் தெரிவித்தனர். எனவே மாவட்ட சுகாதாரத்துறை இதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களபணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

கடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காளபெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.க மற்றும் ஒன்றிய தி.மு.க சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.



தேனி வடக்கு மாவட்டம் கழக மூத்த முன்னோடி உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில் அவருக்கு திமுக இளைஞரணி அறக்கட்டளை சார்பாக 25000 ரூபாய் மருத்துவ நிதியை தேனி மக்களவை உறுப்பினரும் வடக்கு மாவட்டச் செயலாளருமான தங்க தமிழ்ச்செல்வன் வழங்கினார்.



விளாத்திகுளம் வட்டம் குளத்தூர் இந்து நாடார் உறவின்முறை சங்கத்திற்கு பாத்தியப்பட்ட அருள்மிகு அன்னை ஸ்ரீ பத்திரகாளியம்மன் திருக்கோவில் ஆனி பெருந்திருவிழா மற்றும் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு குளத்தூர் காமராஜர் ஸ்போர்ட்ஸ் அகாடமி நடத்தும் 62ம் ஆண்டு தென்னிந்திய அளவிலான மாபெரும் பெண்களுக்கான மின்னொளி கபாடி போட்டியினை முன்னாள் அமைச்சர்,தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர் கீதாஜீவன், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ. வி. மார்கண்டேயன் ஆகியோர் துவக்கி வைத்தனர்.நிகழ்வில் ஆனந்தசேகரன், சின்னமாரிமுத்து, ராமசுப்பு, அன்புராஜன், இம்மானுவேல், வேலுச்சாமி, பொதுக்குழு உறுப்பினர் ராஜாக்கண்ணு, மன்ற உறுப்பினர் கலைச்செல்வி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஸ்ரீநிவாசன், செல்வபாண்டி, ஒன்றிய துணைச் செயலாளர் ராஜபாண்டி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### போதைப்பழக்கம் இல்லாத

# தமிழ்நாட்டை உருவாக்க கையெழுத்து இயக்கம்!

## முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

*செஞ்சி, ஜூலை .19* அனைத்து இந்திய இளைஞர் பெருமன்றத்தின் சார்பாக பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள், போதைப்பழக்கம், சாதி மத வேறுபாடுகள் இல்லாத தமிழ்நாட்டை உருவாக்க ஒரு கோடி கையெழுத்து இயக்கம் நடைபெற்று வருகிறது . அதன் ஒரு பகுதியாக செஞ்சி பகுதியில் நடைபெற்ற கையெழுத்து இயக்கத்தை அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற முன்னணி நிர்வாகி வழக்கறிஞர் ஆனந்தராஜ் தலைமையில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கையெழுத்திட்டு தொடங்கி வைத்தார் . இதில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற நிர்வாகிகள் முருகன், திருமூர்த்தி, கணபதி, சத்யராஜ் மற்றும் தி.மு.க. பொறியாளர் அணி ரசூல் பாஷா, தொண்டரணி சோடா பாஷா உட்பட பலர் பங்கேற்றனர்.

### கழக இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில் – தேனி வடக்கு மாவட்ட

# கழக மூத்த முன்னோடிக்கு ரூ.25,000 நிதி!

## தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. வழங்கினார்!

*தேனி, ஜூலை. 20-* தேனி வடக்கு மாவட்டம் கழக மூத்த முன்னோடி உடல்நிலை பாதிக்கப்பட்ட திராவிட முன்னேற்ற கழக மூத்த முன்னோடிக்கு திமுக இளைஞரணி அறக்கட்டளை சார்பாக 25000 ரூபாய் மருத்துவ நிதியை தேனி மக்களவை உறுப்பினரும் வடக்கு மாவட்ட செயலாளருமான தங்க தமிழ்ச்செல்வன் வழங்கினார்.

தேனி மாவட்டம் போடி மீனாட்சிபுரம் பகுதியில் வசிக்கும் 80 வயது மதிக்கத்தக்க அப்பாஸ் என்பவர் திராவிட முன்னேற்ற கழகத்தின் மூத்த உறுப்பினர். இவர் சமீப காலமாக உடல்நிலை பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சைக்கு பணம் இல்லாமல் பரிதவித்து வந்துள்ளார். அதனை அறிந்த தேனி வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆஜிப்கான் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றார். அதனைத் தொடர்ந்து உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பரிந்துரையில் திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி அறக்கட்டளை மூலம் 25,000 ரூபாய் மருத்துவ நிதி உதவி ஒதுக்கப்பட்டது.

ஒதுக்கப்பட்ட 25,000 ரூபாய் மருத்துவ நிதி உதவியினை தேனி மக்களவை உறுப்பினரும் தேனி வடக்கு மாவட்ட செயலாளருமான தங்க தமிழ்ச்செல்வன் வழங்கினார்.

உடன்வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆஜீப் கான் மீனாட்சிபுரம் பேரூர் கழகச் செயலாளர் செல்வம் மற்றும் கழக முன்னோடிகள் நிதி உதவி பெற்ற கழக மூத்த முன்னோடி அப்பாஸ் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தனது மணமான நன்றியினை தெரிவித்துக் கொண்டார்.

### கழக அரசின் தமிழ்ச்செம்மல் விருது பெற்ற புலவர் இரெ.சண்முகவடிவேல்

# எழுதிய "நினைவின் நிழல்கள்" புத்தக அறிமுகக் கூட்டம்!

## தமிழ்ச் சங்க செயலாளர்கள் ஆசைத்தம்பி – ஆரூர்.அறிவு பங்கேற்பு!

*திருவாரூர், ஜூலை 20 -* கழக அரசின் தமிழ்ச்செம்மல் விருதினை பெற்ற தமிழறிஞரும், நகைச்சுவை நாவலருமான தமிழ்ச்செம்மல் புலவர் இரெ.சண்முக வடிவேல் அவர்களின் "நினைவின் நிழல்கள்" புத்தக அறிமுக விழா திருத்துறைப்பூண்டி தமிழ்ச் சங்கம் சார்பில் நடைபெற்றது.

விழாவிற்கு திருத்துறைப்பூண்டி தமிழ்ச் சங்கத்தின் தலைவர் புலவர் எடையூர் மணிமாறன் தலைமையேற்றார். பத்திரிக்கையாளர் ப.ஜாகிர் உசேன் அனைவரையும் வரவேற்றார். பிரபல எழுத்தாளர்கள் தமிழ்ச்செம்மல் கமலா கந்தசாமி, நகைச்சுவை எழுத்தாளர் கீழை அ.கதிர்வேல், திருத்துறைப்பூண்டி தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் நல் நூலகர் மா.ஆசைத்தம்பி, குவளை கணேசன் , திருவாரூர் தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் ஆரூர். அறிவு ஆகியோர் முன்னிலை ஏற்றனர்.

தமிழ்ச்செம்மல் புலவர் இரெ.சண்முக வடிவேல் அவர்களின் "நினைவின் நிழல்கள்" புத்தகத்தை திருவாரூர் தமிழ் இயக்க நிறுவுனர் புலவர் கோமல் தமிழமுதன் அறிமுகம் செய்து சிறப்புரை யாற்றினார்.

இறுதியில் நூலாசிரியர் நகைச்சுவை நாவலர், தமிழ்ச்செம்மல் புலவர் இரெ.சண்முகவடிவேல் ஏற்புரையாற்றினார். திருத்துறைப்பூண்டி தமிழ்ச் சங்கத்தின் நிர்வாகி ஆசிரியர் யோகராஜன் நன்றி கூறினார்.

விழாவில் தமிழ் சங்க நிர்வாகிகள் , அரசியல் ஆன்மீகம், வர்த்தகம் , பத்திரிக்கைத்துறை பிரமுகர்களும், தமிழ் ஆர்வலர்களும், பாரதமாதா நிறுவன சமூகப்பணியாளர்களும் பொதுமக்களும் பங்கேற்றனர்.

### சாதி பெயர் சொல்லி

# சக நிர்வாகியை இழிவுபடுத்திய த.வெ.க. நிர்வாகி!

## வைரலான ஆடியோவால் நாமக்கல்லில் பரபரப்பு!

*நாமக்கல், ஜூலை 20 -* நாமக்கல் மாவட்ட தமிழக வெற்றிக் கழகத்தின் (தவெக) மேற்கு மாவட்ட செயலாளர் எஸ்.என். சதீஷ், தனது கட்சி நிர்வாகி குறித்து ஜாதி பெயரை கூறியும், தகாத வார்த்தைகளிலும் பேசியதாகக் கூறப்படும் செல்போன் ஆடியோ சமூக வலைதளங்களில் வெளியாகி வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வெளியானதாகக் கூறப்படும் அந்த ஆடியோவில், நாமக்கல் மாநகர கிழக்கு நகர செயலாளர் விஜய் மணியை ஜாதி பெயர் கூறி இழிவுபடுத்தியும், கட்சியில் உள்ள தலித் சமூகத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் குறித்தும் அவதூறாக கருத்து தெரிவித்தும், மிரட்டல் விடுக்கும் வகையிலும் பேசியிருப்பதாக கூறப்படுகிறது.

மேலும், மாவட்ட துணைச் செயலாளர் தில்லை மோகனுடன் நடைபெற்றதாகக் கூறப்படும் இந்த உரையாடல் தேர்தலுக்கு முன்பு நடந்ததாகவும், தற்போது வாட்ஸ்அப் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் பரவி வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த ஆடியோ வெளியானதைத் தொடர்ந்து, நாமக்கல் மாவட்ட த.வெ.க. நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மத்தியில் கடும் அதிருப்தியும், சர்ச்சையும் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. ஜாதி உணர்வுகளைத் தூண்டும் வகையிலான இந்த பேச்சு, கட்சிக்குள்ளேயே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



தென்காசி தெற்கு மாவட்டம் கீழப்பாவூர் மேற்கு ஒன்றியம் வேல்மயில் பட்டிகிளைக் கழகச் செயலாளர் ராம வாசகம் மனைவி லெட்சுமி அவர்கள் இயற்கை எய்தினார். அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன்,தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணிஸ்ரீ குமார் ஆகியோர் ஆறுதல் கூறி ரூபாய் 10,000 ம் நிதி உதவி வழங்கினார்கள்.நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் சீனித்துரை, ரமேஷ் மற்றும் ஒன்றியநிர்வாகிகள் கலந்து கொண்டனர்.